DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

STC .No.135/2024

Deposition of Witness of PW2

| | | | |
|---|---|---|---|
| Name | :சரவணன் | Calling | : |
| Father/Husband's Name | :சுப்ரமணி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 16 th October 2025.

எதிரி ஆஜரில் உள்ளார் .

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் மொடக்குறிச்சியில் வசித்து வருகிறேன். தறி நெசவு தொழில் செய்து வருகிறேன். சுமார் 5வருடங்களுக்கு முன்பு இரவு 9.00 மணிக்கு நான் வேலை முடிந்து வந்து கொண்டு இருந்த போது ஒரு அம்மா மளிகை கடைக்கு சாமான் வாங்கி கொண்டு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து வடக்காக திரும்பும் போது தெற்கிலிருந்து வந்த ஸ்கூட்டி வயாதான அம்மாவின் தொடையில் மோதி அந்த அம்மாவிற்கு காலிலும், முட்டியிலும் அடிப்பட்டது. கடைக்காரரும், நானும் ஆம்புலன்ஸ் ஏற்றிவிட்டு நான் கிளம்பிவிட்டேன். இரவு நேரம் என்பதால் எனக்கு விபத்தை ஏற்படுத்திய வாகனம் அதை ஓட்டி வந்த நபர் அடையாளம் தெரியவில்லை. மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனம் சாமானம் வாங்கிக் கொண்டு வந்த அம்மாவை வேகமாக வந்து மோதியது.

குறுக்கு விசாரணை.

தறிப்பட்டையில் வேலை செய்து ஊர் பெயர் என்னவென்றால் தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. நான் மளிகை கடையில் வேலை முடிந்து வந்து சாமானம் வாங்கிக் கொண்டிருந்தபோது பைக் வந்து மோதிய சத்தம் கேட்டு திரும்பி பார்த்தேன் என்றால் சரிதான். விபத்தில் அடிபட்ட நபர் கீழே விழுந்து கிடந்தார் விபத்தை ஏற்படுத்திய நபர் வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்று விட்டார் நான் அவரை பார்க்கவில்லை என்றால் சரிதான்.போலீசார் என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. விபத்தில் அடிபட்ட நபர் சாலையின் இருபுறமும் கவனிக்காமல் வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்துக்கும் எதிரிக்கும்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.16 18:31:35 +0530

எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல நான் விபத்தை நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் நடக்கவில்லை அதை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.16 18:31:40 +0530

DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,

ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

STC .No.135/2024

Deposition of Witness of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | :குமாரசாமி | Calling | : |
| Father/Husband's Name | :சென்னியப்பன் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 16 th October 2025.

எதிரி ஆஜரில் உள்ளார் .

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வடக்கு வெள்ளியம் பாளையத்தில் வசித்து வருகிறேன். மருந்து விற்பனை பிரதிநிதியாக உள்ளேன். 28.07.2020 இரவு 9.00 மணிக்கு வடக்கு வெள்ளியம் பாளையத்தில் நெல்லை ரம்யா ஸ்டோர் அருகே என் அம்மா மளிகை சாமான் வாங்கி கொண்டு காங்கேயம் to ஈரோடு ரோட்டை கடந்தபோது இருசக்கரம் வாகனம் மோதி வலது காலும், தலையில் காயம் ஏற்பட்டு என் அம்மா சுயநினைவு இன்றி இருந்தார் என்று எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். உடனே ஈரோடு அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைத்தோம். என் அம்மா சிகிச்சை பெற்று வந்தபோது 03.08.2020 அன்று இது சம்பந்தமாக அரச்சலூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். **அந்த புகார் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் என் அம்மா விபத்திற்கு பிறகு இன்று வரை அவர்களுக்கு தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக தன் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் மனநலம், மற்றும் உடல்நலம் பாதிப்பு அடைந்து எங்கும் நடமாட முடியாமல் இருந்து வருகிறார். இது சம்பந்தமாக என்னை போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். இந்த விபத்தை ஏற்படுத்தியது முட்டை கொண்டு வந்த பிரதாப் என்ற நபர் என்று சொன்னார்கள்.

குறுக்கு விசாரணை:

விபத்தில் அடிப்பட்டவர் எனது அம்மா என்று சொன்னால் சரிதான். என் அம்மா அடிப்பட்டவுடன் சுயநினைவு இழந்துவிட்டார் என சொல்வது பொய், ஏனென்றால் எனது மொபைல் போன் நம்பர் பெற்றுள்ளதால் சுயநினைவுடன் தான் இருந்து இருப்பர் என்றால் தவறு. நான் புகாரில் முட்டை வண்டி எதிரி ஓட்டி வந்தாக குறிப்பிட்டேன்

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.16 18:31:48 +0530

என்றால் இல்லை. எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை, விபத்தில் காயம் பட்டது எனது அம்மா என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பட்டவாறு சம்பவம் நடந்து இருந்தால் 5 நாட்கள் தாமதமாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது அம்மா கவனக்குறைவாக சாலை கடந்தது தான் காரணம் என்றால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.10.16 18:31:53 +0530